## சுருக்கம்

வேளாண்மை – வேளாண்மைப் பொறியியல் துறை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 2012–13–ஆம் ஆண்டில் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களை ரூ.200.00 இலட்சம் செலவில் செயல்படுத்த நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை – வெளியிடப்படுகிறது

---

வேளாண்மை (வே.பொ.2) துறை

அரசாணை (டி) எண்.47 நாள்11.03.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044
மாசி திங்கள் 27-ம் நாள்

படிக்கப்பட்டவை

1. அரசாணை (டி) 182, வேளாண்மைத் துறை, நாள் 29.11.2011.
2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கடிதம் எண்.மபா5/7558/2012, நாள் 9.1.2013

-----

ஆணை :–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2011–2012–ஆம் நிதியாண்டில் பழங்குடியினர் துணை திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப்பாதுகாப்புத் திட்டங்கள் ரூ.344.73 இலட்சம் செலவில் செயல்படுத்த ஆணை வழங்கப்பட்டது.

2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) மேலே இரண்டில் படிக்கப்பட்ட தமது கடிதத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப்பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2012–2013–ம் ஆண்டில் 550.365 ஹெக்டேர் நிலப்பரப்பில் 100 சதவிகித அரசு மானியத்தில் ரூ.200.00 இலட்சம் செலவினத்தில் 570 பழங்குடியின விவசாயிகள் பயனடையும் வகையில் கீழ்கண்ட மண்வளப்பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்த ஒப்புதல் வழங்குமாறு தலைமைப் பொறியாளர்(வேளாண்மைப் பொறியியல்) அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

சமஉயரக் கற்சுவர் / சமதள ஆதாரசுவர் அமைத்தல் :

மலைத் தொடர்களில் உள்ள நிலங்கள் மழைநீர் அரிப்பால் பயனில்லாத நிலங்களாக மாறிவிட வாய்ப்பு உள்ளதால், அதனைத் தடுக்கும் பொருட்டு சமஉயரக் கற்சுவர்கள் மற்றும் சமதள ஆதாரசுவர்அமைக்கப்படுகிறது. இதனால் இப்பகுதியில் பெய்யும் மழைநீர் ஆங்காங்கே சேகரிக்கப்பட்டு நிலத்தடி நீர் மேம்பட வாய்ப்பு உள்ளது. மேலும், மண் அரிப்பை தவிர்க்க உதவுவதாலும் மற்றும் மண்ணின் ஈரத்தன்மையை பெருக்கி விளை நிலங்களாக மாற்றிட வாய்ப்பு உள்ளதால் இம்மலைத் தொடர்களில் சமஉயரக் கற்சுவர் மற்றும் சமதள ஆதாரசுவர் அமைக்கப்படுகிறது.

நிலம் சமன் செய்தல் :

மலைத் தொடர்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ள நிலங்கள் சரிவு அதிகமாக இருப்பதால் விவசாயம் பார்க்க இயலாது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு நீர்ப்பாசன வசதியுள்ள பழங்குடியின விவசாயிகளின் நிலங்களை சமன்செய்து சரிவு சதவிகிதத்தினை குறைத்து அதனைச் சீராக்கித் தருவதே முக்கிய நோக்கமாகும். சீரமைக்கப்பட்ட நிலத்தில் விவசாயிகள் காய்கறிகள், மிளகாய் போன்ற பயிர்களை சாகுபடி செய்து தங்களது வருமானத்தைப் பெருக்கி கொள்ள ஏதுவாகும்.

<u>குழாய் மூலம் பாசனம் செய்தல் :</u>

நீர்பாசனம் உள்ள ஆதிதிராவிட விவசாயிகளின் நிலத்தில் பி.வி.சி. குழாய் மூலம் பாசனம் செய்வதற்கு திட்டமிட்டு, குழாய் அமைத்து தருதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதனால் வாய்க்கால் மூலம் பாசனம் செய்தால் வீணாகும் நீர் சேகரிக்கப்பட்டு சிக்கனமாக பாசனம் செய்ய இயலும்.

<u>தடுப்பணைகள் கட்டுதல் :</u>

மலைத் தொடர்களில் உள்ள ஓடைகள் வெள்ளத்தின்போது நீர் பெருக்கெடுத்து ஓடுவதால் அருகிலுள்ள சாகுபடி நிலங்களில் மண் அரிப்பினால் ஓடைகள் ஏற்பட்டு பயனில்லா நிலங்களாக மாறிவிட வாய்ப்பு உள்ளது. மண் அரிமானத்தை தடுக்கும் பொருட்டும் மழைநீர் சேகரிக்கவும், ஓடையின் போக்கினை நிலை நிறுத்தவும், ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் மழைநீரின் வேகத்தைக் கட்டுப்படுத்தவும், மண் அரிப்பினை கட்டுப்படுத்தவும் இயலும் என்பதினால் இப்பணிகளுக்கு விவசாயிகளிடையே பெரும் வரவேற்பு உள்ளது. மேலும் இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் பாசன தடுப்பணைகளில் மழைநீர் சேகரிக்கப்பட்டு அருகிலுள்ள நிலங்களில் பாசன வசதி ஏற்படுத்தித் தர வாய்ப்பு உள்ளது. இதனால் ஆதி திராவிட விவசாயிகள் தங்களது நிலத்தில் நீர்த்தேவை மிக்க பயிர்களான நெல் மற்றும் வாழை போன்ற பயிர்களையும் சாகுபடி செய்ய இயலும். அதனால் தங்களது வருமானத்தினை பெருக்கிக் கொள்ளவும், வருமானத்தினை நிலை நிறுத்தவும் இயலும்.

3. மேலும் இத்திட்டத்தின்கீழ் 2012–2013–ஆம் ஆண்டில் சுமார் 550.365 எக்டேர் பரப்பில் மற்றும் 68 எண்கள் கட்டுமானப் பணிகள் மேற்கூறப்பட்டுள்ள பணிகள் 100 சதவீத அரசு மானியத்தில், ரூ.200.00 இலட்சங்களில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், இதனால் பயனடையும் மலைவாழ் விவசாயிகளின் எண்ணிக்கை 570 என்றும், தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அவர்கள் தெரிவித்துள்ளார். இதன் விபரங்கள் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளது.

| வ. எண். | மாவட்டம் | மலையின் பெயர் | பரப்பு எண் | | பயனாளிகள் எண்ணிக்கை | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| | | | எக்டேர் | எண் | | |
| 1. | வேலூர் | ஜவ்வாது | 96.94 | 2 | 90 | 19.34 |
| 2. | திருவண்ணாமலை | ஜவ்வாது | 101.90 | 0 | 95 | 16.58 |
| 3. | விழுப்புரம் | கல்ராயன் | 10.28 | 8 | 23 | 12.91 |
| 4. | தர்மபுரி | சித்தேரி | 39.945 | 4 | 60 | 23.38 |
| 5. | சேலம் | சேர்வராயன் கல்ராயன் அருநூத்துமலை மற்றும் பச்சைமலை | 190.295 | 45 | 212 | 94.14 |
| 6. | நாமக்கல் | கொல்லிமலை | 78.665 | 8 | 75 | 23.93 |
| 7. | திருச்சி | பச்சைமலை | 32.34 | 1 | 15 | 9.72 |
| | மொத்தம் | | 550.365 | 68 | 570 | 200.00 |

4. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தர்மபுரி, சேலம், நாமக்கல் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப்பகுதிகளில் 2012–2013–ஆம் ஆண்டு 550.365 எக்டேர் நிலப்பரப்பில் ரூ.200.00 இலட்சம் செலவில் நூறு சதவீத மானியத்தில் 570 மலைவாழ் விவசாயிகள் பயனடையும் வகையில் இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளபடி மண்வளப்பாதுகாப்பு திட்டங்களைச் செயல்படுத்த கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு ஆணை வழங்கப்படுகிறது.

"Henceforth (From 2013-14) this scheme will not be continued in view of the similar scheme by AD&TW department and that no new work should be taken up till Administrative sanction is received".

5. மேலே பத்தி நான்கில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்.

"4402–00–மண்வள நீர்வளப்பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு–796– பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம்– பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JA – மண்வளப்பாதுகாப்புத் திட்டங்கள்–16 – பெரும்பணிகள்" (குதொ.கு.எண். 4402–00–796– JA –1609)

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையைப் பெற்று வழங்கிட தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

7. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களால் செயல்படுத்தப்படும் மேற்படி திட்டங்களின் செயல்பாட்டினை ஆய்வு செய்வதுடன் திட்டம் தொடர்பான பணி முன்னேற்ற அறிக்கை, பயனீட்டுச் சான்றிதழ் மற்றும் பயனடைந்தோர் எண்ணிக்கை ஆகிய விவரங்களையும் ஆய்வு செய்யுமாறும் அவ்வாறு நடத்திய ஆய்வு குறித்த அறிக்கையை மாதந்தோறும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8. இவ்வாணை நிதித் துறையின் ஒப்புதலை அ.சா.கு.எண். 65/DS(SR)/2013, நாள் 08.03.2013 பெற்று வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர்(வேளாண்மைப் பொறியியல் துறை), சென்னை–35.
மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம், வேலூர், தர்மபுரி, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல் மற்றும் திருச்சி.
ஆதி திராவிடர் பழங்குடியினர் நல ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 மற்றும் (பெயரில்).
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18 (மற்றும் பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
கருவூல அலுவலர், விழுப்புரம், வேலூர், தர்மபுரி, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல் மற்றும் திருச்சி.

நகல்

ஆதி திராவிடர் பழங்குடியினர் நல (ப.மே.2) துறை/நிதித்துறை/திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
வேளாண்மைத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மைத் துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

G.O.(D) No 47 Agri(AED) Dept. dated 11.3.2013.

இணைப்பு1

ஒருங்கிணைந்த மலைவாழ் மேம்பாட்டுத் திட்டம் (2012–13)

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | மலையின் பெயர் | வட்டாரத்தின் பெயர் | நீர்வடிப் பகுதி | நீர்வடிப்பகுதி குறியீடு எண். | நுண்ணிய நீர்வடிப் பகுதி | கிராமத்தின் பெயர் | மேற்கொள்ளப்படும் பணிகளின் விவரம் | செயல் பரப்பு (ஹெக். | செயல் எண்கள் | பயனாளிகள் எண்ணிக்கை | தேவைப் படும் நிதி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 1 | வேலூர் | ஜவ்வாது மலை | ஆலங்காயம் | புங்கம்பட்டு நாடு | 4C1C4 | a4c4 | கம்புக்குடி, ரங்கசமுத்திரம் | சமஉயரக் கற்சுவர் | 50.800 | 0 | 90 | 10.38 |
| | | | | | | | | நிலம் சீரமைத்தல் | 23.840 | 0 | | 3.86 |
| | | | | | | | | பி.வி.சி. குழாய் மூலம் பாசனம் | 18.500 | 0 | | 2.98 |
| | | | | | | | | கம்பிவலைத்தடுப்பணை | | 2 | | 1.27 |
| | | | | | | | | சமதள ஆதாரச்சுவர் | 3.800 | | | 0.86 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 96.940 | 2 | | 19.34 |
| | | | | | | | | மாவட்ட மொத்தம் | 96.940 | 2 | 90 | 19.34 |
| ௨. | திருவண்ணா–மலை | ஜவ்வாது மலை | ஜவ்வாது மலை | நாகவதி | 4C2B1 | c1a1 | வீரப்பனூர் | சமஉயரக் கற்சுவர் | 47.100 | | 55 | 7.40 |
| | | | | | | | | பி.வி.சி. குழாய் மூலம் பாசனம் | 10.000 | | | 1.63 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 57.100 | 0 | 55 | 9.03 |
| | | | | | | c5a9 | வீரப்பனூர் | நிலம் சீரமைத்தல் | 44.800 | | 40 | 7.55 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 44.800 | 0 | 40 | 7.55 |
| | | | | | | | | மாவட்ட மொத்தம் | 101.900 | 0.000 | 95 | 16.583 |
| 3 | விழுப்புரம் | கல்ராயன் மலை | வெள்ளிமலை | கோமுகி | 4C1A2 | d3a1d | சேரப்பட்டு | தடுப்பணை | | 1 | 4 | 4.30 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | | 1 | 4 | 4.30 |
| | | | | மணி–முத்தாறு | 4C1B5 | d3a1d | அரனூர் | பி.வி.சி. குழாய் மூலம் பாசனம் | 1.000 | | 4 | 0.22 |
| | | | | | | | | கம்பிவலைத்தடுப்பணை | | 5 | | 3.00 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 1.000 | 5 | 4 | 3.21 |
| | | | | | | d3a1d2 | சிறுகலூர் | பி.வி.சி. குழாய் மூலம் பாசனம் | 9.280 | | 15 | 1.74 |
| | | | | | | | | தடுப்பணை | | 2 | | 3.66 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 9.280 | 2 | 15 | 5.40 |
| | | | | | | | | மாவட்ட மொத்தம் | 10.280 | 8 | 23 | 12.91 |

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | மலையின் பெயர் | வட்டாரத்தின் பெயர் | நீர்வடிப் பகுதி | நீர்வடிப்பகுதி குறியீடு எண். | நுண்ணிய நீர்வடிப் பகுதி | கிராமத்தின் பெயர் | மேற்கொள்ளப்படும் பணிகளின் விவரம் | செயல் பரப்பு (ஹெக். | செயல் எண்கள் | பயனாளிகள் எண்ணிக்கை | தேவைப் படும் நிதி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 4 | தருமபுரி | சித்தேரி மலை | பாப்பிரெட்டிப் பட்டி | ஆனைமடுவு | 4C1A5 | d1b2 | சித்தேரி | நிலம் சீரமைத்தல் | 8.465 | | 60 | 1.27 |
| | | | | | | | | பி.வி.சி. குழாய் மூலம் பாசனம் | 10.505 | | | 1.31 |
| | | | | | | | | சமதள ஆதாரச்சுவர் | 20.975 | | | 5.05 |
| | | | | | | | | தடுப்பணை | | 4 | | 15.75 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 39.945 | 4 | 60 | 23.38 |
| | | | | | | | | மாவட்ட மொத்தம் | 39.945 | 4 | 60 | 23.38 |
| 5 | சேலம் | அறநூத்து மலை | வாழப்பாடி | ஆனை மடுவு | 4C1A5 | c2d1 | கன்னகட்டியாலா | தடுப்பணை | 19.460 | | 12 | 14.85 |
| | | | | | | | | சமதள ஆதாரச்சுவர் | | 3 | | 3.86 |
| | | | | | | | | உதிரி கற்கள் தடுப்பணை | | 3 | | 0.54 |
| | | | | | | | | கம்பிவலைத்தடுப்பணை | | 4 | | 1.84 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 19.460 | 10 | 12 | 21.09 |
| | | | | | | | | மலை மொத்தம் | 19.460 | 10 | 12 | 21.09 |
| | | சேர்வராயன் மலை | ஏற்காடு | வாணியார் | 4C1C2 | b4b2 | நல்லூர், சோளம்பாடி, மேட்டூர், அணைக்காடு | சமதள ஆதாரச்சுவர் | 61.510 | 8 | 80 | 13.32 |
| | | | | | | | | கம்பிவலைத்தடுப்பணை | | 6 | | 4.80 |
| | | | | | | | | உதிரி கற்கள் தடுப்பணை | | | | 1.20 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 61.510 | 14 | 80 | 19.32 |
| | | | | | | b4b4b | நல்லூர் | சமதள ஆதாரச்சுவர் | 32.240 | 1 | 50 | 7.02 |
| | | | | | | | | பாசன தடுப்பணை | | | | 6.00 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 32.240 | 1 | 50 | 13.02 |
| | | | | | | | | மலை மொத்தம் | 93.750 | 15 | 130 | 32.33 |

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | மலையின் பெயர் | வட்டாரத்தின் பெயர் | நீர்வடிப் பகுதி | நீர்வடிப்பகுதி குறியீடு எண். | நுண்ணிய நீர்வடிப் பகுதி | கிராமத்தின் பெயர் | மேற்கொள்ளப்படும் பணிகளின் விவரம் | செயல் பரப்பு (ஹெக். | செயல் எண்கள் | பயனாளிகள் எண்ணிக்கை | தேவைப் படும் நிதி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| | | கல்ராயன் மலை | ஆத்தூர் | ஆனை மடுவு | 4C1A5 | b3a | கோவில்புதூர் | தடுப்பணை | | 1 | | 4.00 |
| | | | | | | | | சமதள ஆதாரச்சுவர் | 26.385 | | | 4.75 |
| | | | | | | | | உதிரி கற்கள் தடுப்பணை | | 8 | | 1.44 |
| | | | | | | | | கம்பிவலைத்தடுப்பணை | | 3 | | 1.80 |
| | | | | | | | | பாசன தடுப்பணை | | 2 | 30 | 8.00 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 26.385 | 14 | 30 | 19.99 |
| | | | | | | | | மலை மொத்தம் | 26.385 | 14 | 30 | 19.99 |
| | | பச்சைமலை | கங்கவள்ளி | கல்லார் | 4C1A8 | c6c5 | நெய்வாசல், பொன்னாவரைஓடை டகாடு, முள்ளிகுளம் | சமஉயரக் கற்சுவர் | 30.500 | | | 5.49 |
| | | | | | | | | தடுப்பணை | | 2 | 40 | 9.00 |
| | | | | | | | | சமதள ஆதாரச்சுவர் | 20.200 | | | 3.64 |
| | | | | | | | | கம்பிவலைத்தடுப்பணை | | 4 | | 2.60 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 50.700 | 6 | 40 | 20.73 |
| | | | | | | | | மலை மொத்தம் | 50.700 | 6 | 40 | 20.73 |
| | | | | | | | | மாவட்ட மொத்தம் | 190.295 | 45 | 212 | 94.14 |
| 6 | நாமக்கல் | கொல்லி மலை | கொல்லி மலை | ஐயாறு ஆறு | 4B1B2 | c3b2e4 | அரியூர் நாடு, | சமதள ஆதாரச்சுவர் | 78.665 | | 75 | 18.75 |
| | | | | | | | | கம்பிவலைத்தடுப்பணை | | 8 | | 5.18 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 78.665 | 8 | 75 | 23.93 |
| | | | | | | | | மாவட்ட மொத்தம் | 78.665 | 8 | 75 | 23.93 |
| 7 | திருச்சி | பச்சைமலை | துறையூர் | கல்லாறு | 4C1A8 | a3c2 | வண்ணாடு | சமஉயரக் கற்சுவர் | 32.340 | | | 6.02 |
| | | | | | | | | தடுப்பணை | | 1 | 15 | 3.70 |
| | | | | | | | | நீர்வடிப்பகுதி மொத்தம் | 32.340 | 1 | 15 | 9.72 |
| | | | | | | | | மாவட்ட மொத்தம் | 32.340 | 1 | 15 | 9.72 |
| | | | | | | | | ஆக மொத்தம் | 550.365 | 68 | 570 | 200.00 |

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

/ உண்மை நகல் /

பிரிவு அலுவலர்